


ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீ உபமாக க்ஷேத்ர மஹிமை

## “கலௌ வேங்கட நாயக” :

# வைகுண்ட தரிசனம்

ஏகேந ஸங்க மபரேண கரேணசக்ரம் - அன்யேந
கட்கமிதரேண ததுஸ்ஸு பாணம் I

வாமேச்ரியம் பரிதரம் துரகாதிரூடம் - பாயாத்ஸமாம் கக நக
ஸ்தித வேங்டேசம் II

“ஏக ஹஸ்தம் கடிஞ்சைவ வாமே சங்கம்ச நிக்ஷிபேத் I

தக்ஷிணே சக்ர ஹஸ்தம்து ஏகம் வைகுண்ட ஹஸ்தகம் I

அலர்மேல் மங்க ஸம்யுக்தம் வேங்கடேச மஹம்பஜே” II

1. ஸ்ரீமந்நாராயணன் எடுத்த தசாவதாரங்களில் பத்தாவதான கல்கி அவதாரத்தில் சுயம்பு ரூபத்தில் ஸ்ரீநிவாஸனாக இந்த “உபமாக க்ஷேத்ரத்தில் பெருமாள் எழுந்தருளியுள்ளார்”.
2. இங்கு கருட பர்வத்தின் மீது ஸாளகராம ரூபத்தில் குதிரையின் மீது லக்ஷ்மீ ஸமேதனாக ஆறு திருக்கரங்களுடன், நான்கு ஆயுதங்களுடன் எழுந்தருளி இருக்கிறார்.
3. 108 அபிமான ஸ்தலங்களில் இது ஒன்றாகக் கருதப்படுகிறது.
4. இந்த திருக் கோவிலில் பெருமாள் வடக்கு முகமாக எழுந்தருளி இருப்பதால் கிடைத்தற்கறிய “உத்தர த்வார தரிசனம்” இங்கு தினமும் கிடைக்கிறது.
5. உலகில் எங்கும் நிறைந்திருப்பினும் பெருமாள் இரவு வேளையில் இங்குவந்து ஸயநிப்பதாக பக்தர்கள் கூறுகின்றனர்
6. இங்கு தினமும் “பஞ்சாம்ருத அபிஷேகம்” நடக்கிறது.
7. இங்குள்ள பெருமாளை வடக்கு ஆந்திராவின் ஸ்ரீநிவாஸனாக ப்கதர்கள் கருதுவதால் திருமலையில் நடப்பது போல் இங்கும் உத்ஸவம் நடந்து வருகிறது. ஆகையால், திருமலைக்கு செல்ல முடியாத பக்தர்கள் இந்த பெருமாளை ஸேவித்து தன்யர்கள் ஆகின்றனர்.
8. கருடனுடைய ரூபத்தில் இருப்பதாலும், கருடனுக்கு ப்ரத்யக்ஷம் ஆனதாலும், இந்த மலை கருடாத்ரி, “கருடாசலம்” கருட பர்வதம் என்று கூறப்படுகிறது.
9. இந்த மலையடி வாரத்தில் ஸ்ரீ ஸீதாராம ஸமேத “தாஸாஞ்ஜநேயர்” ஸன்னிதி உள்ளது அதற்கு எதிரில் த்ரிதண்டி பெரிய ஜீயரால் ப்ரதிஷ்டை செய்ய பட்ட 48வது ராம க்ரது தூண் உள்ளது.
10. அருகில், க்ஷேத்ர பாலகனான “ஸ்ரீ ஸந்தான வேணுகோபால” னும், ஸ்ரீ பூ ஸமேத ஸ்ரீநிவாஸரின் உத்ஸவ மூர்த்திகளும் உள்ளன. இதைச் சுற்றி ஸ்ரீ ஆண்டாள், நம்மாழ்வார், உடையவர். மாமுனிகள் ஸன்னிதிகள் உள்ளன.



11. மலையடி வாரத்தில் "பந்துர ஸரஸ்" என்கிற குளம் உள்ளது. இங்கு ப்ரஹ்மா, நாரதர் தவம் செய்துள்ளனர், அதிதி கச்யப தம்பதிகள் தவம் செய்து அனைத்து யுகங்களிலும் பெருமாளுக்கு பெற்றோர்களாகும் வரத்தைப் பெற்றார்கள். இந்த பெருமாள் ஸந்தான பாக்யத்தை அருள்பவர் என பக்தர்கள் நம்புகின்றனர். இங்கு புஷ்கரிணியில் நீராடி, மலை ஏறி, பஞ்சாம்ருத அபிஷேகத்தைக் கண்டு களித்து, தீர்த்த ப்ரஸாதம் ஸ்வீகரித்தால் ஸ்ந்தான பாக்யம் ஏற்படுகிறது. திருவாராதனத்திற்கு இந்த தீர்த்தம் தான் உபயோகப்படுகிறது. இந்த குளத்தில் நீராடினால் ஸர்வ பாவங்களும் தொலைந்து திருமலையில் உள்ள பாபவிநாச தீர்த்தத்தில் நீராடின பலனும் கிடைக்கிறது.

12. "மனதிலுள்ள கோரிக்கைகள் நிறை வேறினால் கால் நடையாகவே மலை ஏறி வழி படுவேன்" என்று நினைத்தாலே கோரிகைகள் நிறைவேறுகின்றன என்று பக்தர்களின் நம்பிக்கை.

13. இந்த க்ஷேத்திரத்தில் கனு பொங்கல் அன்று ராஜாதிராஜ வாஹனத்தில் பெருமாள் கிரிவலம் வருவது விசேஷம். மற்ற தலங்களில் பக்தர்கள் தான் கிரிவலம் வருவது வழக்கம்.

14. "உபமாக" என்னால் உபமானம் இல்லாதது என்று பொருள்.

15. இந்த க்ஷேத்திரத்தில் "நித்ய அன்னதான திட்டம்" கோஸம்ரக்ஷண திட்டம், ஆலய திருப்பணி திட்டம் உள்ளன. இந்த திட்டங்களில் பக்தர்கள் இயன்ற அளவு கலந்து கொண்டு பெருமாள் அருளை பெறலாம். விவரங்ளுக்கு www.upamakabalaji.com என்கிற Website ஐ தொடர்பு கொள்ளவும்.

16. இந்த க்ஷேத்திரத்தின் மஹிமைகளை மேலும் அறிய தெலுங்கிலுள்ள "ஶ்ரீ உபமாக க்ஷேத்திர மஹாத்ம்யம்" என்கிற புத்தகம் பார்க்கவும். இந்த புத்தகத்தை கோவிலிலும், விஷாலாந்த்ரா புக் ஹௌஸிலும் பெறலாம் மேலும் அனைவருக்கும் இலவசமாககிடைக்க ஆந்திராவிலுள்ள அனைத்து அரசு புத்தகாலயங்களில் இந்த புத்தகம் கிடைக்கும்.

17. இதனருகில் அன்னவரம் மற்றும் ஸிம்ஹாசலம் ஆகிய க்ஷேத்திரங்களும், ஸமுத்திரமும் உள்ளதால் பக்தர்கள் அடிக்கடி வந்துச் செல்கின்றனர்.

18. இந்த க்ஷேத்திரம் அன்ன வரத்திலிருந்து 40 கிமீ, துனியிலிருந்து 19 கி.மீ., விஷாக பட்டணம் செல்லும் மார்கத்தில் நக்கபல்லி க்கு 1 கி.மீ. தூரத்திலும் உள்ளது. இங்கிருந்து விஷாகபட்டணம் 85 கி.மீ. தூரத்தில் உள்ளது.

தரிசித்து அருள் பெற வாருங்கள்.

ஆலய விலாசம் :

**ஶ்ரீஶ்ரீஶ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்**

**உபமாக க்ஷேத்ரம்**


உபமாக கிராமம், நக்கபல்லி மண்டலம்,
விஷாகபட்டணம் ஜில்லா, ஆந்திர ப்ரதேஷ் - 531 081.
**Phone : +91 92476 20111**
**Website : www.upamakabalaji.com E-mail : upamakabalaji@gmail.com**